# சூரிய புறவெளி ஆய்வு: செப். 2-இல் ஆதித்யா எல்-1 விண்கலம்



**சென்னை, ஆக. 28:** சூரியனின் புற வெளியை ஆய்வு செய்வதற்கான ஆதித்யா எல்-1 விண்கலம், பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் மூலம் வரும் சனிக்கிழமை (செப். 2) விண்ணில் செலுத்தப்படுகிறது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் ஆய்வு மையத்தில் இருந்து அன்றைய தினம் காலை 11.50 மணிக்கு ராக்கெட்டை செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

செவ்வாய் கிரகம், நிலவைத் தொடர்ந்து சூரியனின் புறவெளிப் பகுதியை ஆராய்ச்சி செய்வதற்கான முனைப்பில் ஆதித்யா எல்-1 எனும் விண்கலத்தை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

இதில் சோலார் அல்ட்ராவைலட் இமேஜிங் டெலஸ்கோப், பிளாஸ்மா அனலைசர், எக்ஸ்ரே ஸ்பெக்ஸ்ட்ரோமீட்டர் உள்பட 7 விதமான ஆய்வுக் கருவிகள் இடம்பெற்றுள்ளன.

சூரிய ஆய்வுக்காக இந்தியா அனுப்பும் முதல் விண்கலமான ஆதித்யா எல்-1 சுமார் 400 கிலோ எடை கொண்டது.

பூமியில் இருந்து சுமார் 15 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள 'லாக்ராஞ்சியன் பாயின்ட் ஒன்' எனும் பகுதியில் அந்த விண்கலம் நிலைநிறுத்தப்பட உள்ளது.

அந்தப் பகுதியில்தான் சூரியனுக்கும், பூமிக்கும் இடையேயான ஈர்ப்பு விசை நிலையாக இருக்கும். அதனால் அங்கு இருந்தபடி சூரியனின் வெளிப்புற பகுதியின் வெப்பச் சூழல், கதிர்வீச்சு, காந்தப் புலம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த ஆய்வுகளை ஆதித்யா எல்-1 மேற்கொள்ள உள்ளது.

ஆதித்யா எல்-1 விண்கலம் பெங்களூரு யூ.ஆர்.ராவ் செயற்கைக்கோள் வடிவமைப்பு மையத்திலிருந்து, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி ஆய்வு மையத்துக்கு அண்மையில் கொண்டு வரப்பட்டது. அதன்பின்னர் விண்கலத்தை ராக்கெட்டுடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது இறுதி நிலையை அத்திட்டம் எட்டியுள்ளது.

சூரியனை ஆய்வு செய்ய இதுவரை அமெரிக்கா, ரஷியா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு மட்டுமே விண்கலங்களை அனுப்பியுள்ளன. அந்த வரிசையில் தற்போது நான்காவது நாடாக இந்தியா அத்தகைய ஆய்வை முன்னெடுக்கிறது.

# தமிழகத்துக்கு 5,000 கனஅடி காவிரி நீர்: ஒழுங்காற்றுக் குழு முடிவு

நமது சிறப்பு நிருபர்

**புதுதில்லி, ஆக.28:** தஞ்சை டெல்டா பகுதியில் குறுவை நெற்பயிர் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில், தமிழகத்துக்கு உடனடியாக 5,000 கன அடி தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இது குறித்து செவ்வாய்க்கிழமை (ஆக. 29) நடைபெறும் காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட்டு உத்தரவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு (சி.டபிள்யு.ஆர்.சி.) கூட்டத்தின் 85-ஆவது கூட்டம் காணொலி மூலம் திங்கள்கிழமை நடைபெற்றது.

ஒழுங்காற்றுக் குழுவின் தலைவர் வினித் குப்தா தலைமையில் தில்லியிலிருந்து நடைபெற்ற கூட்டத்தில், நான்கு மாநில ஒழுங்காற்றுக் குழு உறுப்பினர்களும், மத்திய அரசின் பிரதிநிதிகளும் காணொலி மூலம் பங்கேற்றனர்.

தமிழகத்தின் சார்பில் காவிரி ஒழுங்காற்றுக் குழு உறுப்பினர் தலைமைப் பொறியாளர் (திருச்சி) சுப்பிரமணி, சென்னையிலிருந்து காவிரி தொழில்நுட்பக் குழுத் தலைவர் ஆர்.சுப்பிரமணியன், துணைத் தலைவர் பட்டாபி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், காவிரியில் தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட தண்ணீர் அளவு, காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழையளவு, அடுத்த சில வாரங்களுக்குரிய வானிலை முன்னறிவிப்புகள் உள்ளிட்ட தரவுகள் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.



காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவு குறித்து செவ்வாய்க்கிழமை (ஆக. 29) நடைபெறும் காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்பட்டு உத்தரவிடப்படும்.

உச்சநீதிமன்றத்தில் வைக்கப்பட்ட வாதங்களைப் போன்று, இந்தக் கூட்டத்திலும் கருகும் குறுவை நெல் பயிர் குறித்து தமிழகத்தின் சார்பில் குறிப்பிட்டு நாளொன்றுக்கு 24,000 கன அடி தண்ணீர் திறந்துவிடக் கோரப்பட்டது.

மேலும், கடந்த ஆகஸ்ட் 10-ஆம் தேதி சி.டபிள்யு.ஆர்.சி. கூட்டத்தில், தமிழகத்துக்கு நாளொன்றுக்கு 15,000 கன அடி வீதம் 15 நாள்களுக்கு தண்ணீர் திறந்துவிட முடிவு செய்யப்பட்டது. ஆனால், கர்நாடகம் 8,000 கன அடி தண்ணீர் வீதம் மட்டுமே குறைவான நாள்களில் விடுவித்தது என தமிழகம் வாதிட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கர்நாடகம், மழை பொய்த்தது, குறைவான நீர்வரத்து, அணைகளில் 40 சதவீதம் நீர்மட்டம் குறைவாக இருப்பது போன்றவற்றைக் காரணமாகக் கூறியது. இறுதியாக, 3,000 கன அடி தண்ணீர் மட்டுமே திறந்துவிட கர்நாடகம் ஒப்புக்கொண்டது.

ஆனால், அடுத்த 15 நாள்களுக்கு காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழைக்கான (செப். 9-ஆம் தேதி வரை) வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கர்நாடகத்தில் காவிரி நதியின் குறுக்கேயுள்ள கிருஷ்ணராஜ சாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய நான்கு அணைகளில் மொத்தம் 72 டிஎம்சி தண்ணீர் உள்ளது. இந்த நிலையில், தமிழகத்துக்கு பிலிகுண்டுலுவில் நாளொன்றுக்கு 5,000 கன அடி வீதம் தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட கூட்டத்தில் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவு செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள 23-ஆவது காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் முன்வைக்கப்பட உள்ளது.

இதை ஆணையம் ஏற்றுக்கொள்ளும் நிலையில், தமிழகத்துக்கு இந்த அளவில் தண்ணீர் திறந்துவிட வாய்ப்பு உள்ளது. ஆணையத்தின் முடிவை உச்சநீதிமன்றமும் எதிர்பார்த்துள்ளது.

# ‘வெங்காய’ சிக்கல்!

தக்காளியைத் தொடர்ந்து மத்திய அரசின் கவனம் இப்போது வெங்காயத்தின் பக்கம் திரும்பியிருக்கிறது. சில வாரங்களாக எட்ட முடியாத உச்சத்தை சந்தித்த தக்காளி விலை, ஓரளவுக்கு குறைந்திருக்கும் நிலையில், வெங்காயத்தின் விலை அதிகரித்திருப்பது அரசை மட்டுமல்ல, சாமானியர்களையும் கவலைக்குள்ளாக்கி இருக்கிறது.

காய்கறிகளின் விலைவாசி ஏறத்தாழ 37% அதிகரித்ததால் ஜூலை மாத சில்லறை விலை உயர்வு 7.4%-ஆக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதே நிலைமை ஆகஸ்ட் இறுதிவரை தொடரக் கூடும் என்பதுதான் எதிர்பார்ப்பு. முக்கியமான சில மாநிலங்களில் சட்டப் பேரவைத் தேர்தல் நடக்க இருக்கும் நிலையில், உணவுப் பொருள்கள், காய்கனிகளின் விலைவாசி உயர்வைக் கட்டுக்குள் கொண்டு வரும் தீவிர நடவடிக்கைகளில் மத்திய அரசு முனைப்புக் காட்டுவதில் ஆச்சரியம் இல்லை.

பல தொடர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் விலைவாசி உயர்வால் அரசின் மீது ஏற்பட்டிருக்கும் அதிருப்தியைப் போக்கும் முயற்சிகள் தொடர்கின்றன. சில மாநிலங்களில் சட்டப் பேரவைத் தேர்தல் நெருங்குவது மட்டுமல்லாமல், பண்டிகைக் காலமும் தொடங்க இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு சந்தையில் வெங்காயம் தாராளமாகக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறது மத்திய அரசு.

ஆண்டு கடைசி வரை வெங்காய ஏற்றுமதிக்கு 40% வரியை ஆகஸ்ட் 19-ஆம் தேதி அறிவித்தது. சமீப காலமாக காரணமே இல்லாமல் திடீரென்று அதிகரித்திருக்கும் வெங்காய ஏற்றுமதிக்கு தடைபோடும் முயற்சி இது. ஏற்றுமதியின் மீது வரி விதித்திருப்பது மட்டுமல்லாமல், தனது சேமிப்பிலுள்ள வெங்காயத்தை மொத்தச் சந்தையில் விடுவித்து சில்லறை விலையைக் குறைக்கும் முயற்சியிலும் மத்திய அரசு ஈடுபட்டிருக்கிறது.

ஆகஸ்ட் 25 நிலவரப்படி, வெங்காயத்தின் தினசரி சராசரி சில்லறை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.32.60. கடந்த ஆண்டு நிலவரத்துடன் ஒப்பிடும்போது இது 25% அதிகம். அதனால், ஏற்றுமதிக்கு வரி விதிப்பதன் மூலம் மொத்தச் சந்தையில் வெங்காயத்தின் வரவை அதிகரித்து சில்லறை விலையை கட்டுக்குள் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. தேவைக்கு ஏற்ப வெங்காயம் கிடைத்தால் அதன் விலை கட்டுக்குள் வரும் என்பது எதிர்பார்ப்பு.

EVA STALIN IAS ACADEMY

வெங்காயத்தின் விலை உயர்வுக்கு பல்வேறு காரணிகள் இருக்கின்றன. கடந்த பிப்ரவரி மாதம் வழக்கத்தைவிட அதிகமான வெப்பம் காணப்பட்டது. அதைத் தொடர்ந்து, மார்ச் கடைசியிலும் ஏப்ரல் தொடக்கத்திலும் எதிர்பாராத பருவமழைப் பொழிவு ஏற்பட்டது. இந்த இரண்டு பருவநிலை தொடர்பான நிகழ்வுகளோடு, வெங்காய சாகுபடிப் பருவமும் இணைந்ததால் ஏற்பட்ட விளைவைத் தான் இப்போது நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

பொதுவாக இந்தியாவில் மூன்று பருவங்களில் வெங்காயம் பயிரிடப்படுகின்றது. காரீஃப் பருவம், காரீஃப் பருவத்தின் இறுதி பகுதி, ராபி பருவம் என்று வெங்காயம் பயிரிடும் காலங்களை மூன்றாகப் பிரிக்கலாம். ஜூலை, ஆகஸ்ட் மாதம் பயிரிடப்படும் காரீஃப் பருவ வெங்காயம், அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை அறுவடை செய்யப்படுகிறது. அக்டோபர், நவம்பர் மாதங்கள் காரீஃப் பருவம் நிறைவடையும் கட்டம். அப்போது பயிரிடப்படும் வெங்காயம், ஜனவரி முதல் மார்ச் வரை அறுவடை செய்யப்படுகிறது. டிசம்பர், ஜனவரியில் பயிரிடப்படும் ராபி பருவ வெங்காயத்தை, மார்ச் கடைசியிலிருந்து மே மாதம் வரை அறுவடை செய்வது வழக்கம்.

இந்தியாவில் மிக அதிகமாக வெங்காயம் உற்பத்தி செய்யும் மாநிலம் மகாராஷ்டிரம். மொத்த உற்பத்தியில் 39% அங்கிருந்து தான் வருகிறது. வெங்காயத்துக்கான மிகப் பெரிய சந்தையான லசல்கான் மகாராஷ்டிர மாநிலத்தில்தான் இருக்கிறது. மகாராஷ்டிரத்துக்கு அடுத்தபடியாக 17% உற்பத்தி மத்திய பிரதேசத்திலும், அதைத் தொடர்ந்து கர்நாடகம், குஜராத், பிகார், ஆந்திரம், ராஜஸ்தான், ஹரியாணா, தெலங்கானா ஆகிய மாநிலங்களிலும் வெங்காயச் சாகுபடி பெருமளவில் நடைபெறுகிறது.

இந்த ஆண்டின் மொத்த வெங்காய உற்பத்தி 3.1 கோடி டன் என்று கருதப்படுகிறது. சாகுபடி பரப்பு 7% குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. போதாக்குறைக்கு பிப்ரவரி மாத எதிர்பாராத வெப்பம் வெங்காய அறுவடையை விரைவுபடுத்தியது. அதன் விளைவாக வெங்காயத்தின் பருமனும், தரமும் குறைந்துவிட்டன.

போதாக்குறைக்கு, எதிர்பாராத மழைப்பொழிவும் ஏற்பட்டதால் ஆறு மாதம் சேமித்து வைக்கும் வெங்காயத்தின் தரம் குறைந்து, உடனடியாக அவற்றை விற்பதில் விவசாயிகள் முனைப்புக்காட்டினர். இந்த முறை வெங்காயத்திற்குத் தட்டுப்பாடும், விலை உயர்வும் ஏற்பட்டதற்கு முக்கியமான காரணம், பருவநிலை மாற்றம்.

2022 –23–இல் சுமார் ரூ. 4,522 கோடி மதிப்புள்ள 25 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதியாகி இருக்கிறது. நெதர்லாந்துக்கும் (15.8%), மெக்ஸிகோவுக்கும் (11.7%) அடுத்தபடியாக அதிகமாக வெங்காயம் ஏற்றுமதி செய்யும் நாடு இந்தியா (10%). வங்கதேசம், மலேசியா, ஐக்கிய அரபு அமீரகம், இலங்கை, நேபாளம், இந்தோனேசியா, கத்தார், வியத்நாம், ஓமன், குவைத் ஆகிய நாடுகள் வெங்காயத்துக்காக இந்திய இறக்குமதியை நம்பியிருக்கின்றன. மத்திய அரசின் 40% ஏற்றுமதி வரி இந்த நாடுகளில் மிகப் பெரிய வெங்காயத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தக்கூடும்.

உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தினால், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். கிராமப்புறப் பொருளாதாரம் தடுமாறும். கட்டுப்படுத்தாவிட்டாலோ, நகர்ப்புறங்களில் விலைவாசி அதிகரித்து அரசின் மீதான அதிருப்தி அதிகரிக்கும். இதுதான் மத்திய அரசு எதிர்கொள்ளும் தர்மசங்கடம்.

# அனைத்துத் தரப்புக்கும் நிதி சேவைகள்: 'ஜன்தன் திட்டம் புரட்சி'



புது தில்லி, ஆக.28: அனைத்துத் தரப்புக்கும் நிதி சேவைகள் கிடைப்பதில், பிரதமரின் ஜன் தன் திட்டம் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2014–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28–ஆம் தேதி ஜன்தன் திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார்.

அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு திங்கள்கிழமை 9 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தியில் தெரிவித்ததாவது:

நாட்டில் ஜன்தன் திட்ட வழிகாட்டுதலில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் டிஜிட்டல் மாற்றம், அனைத்துத் தரப்புக்கும் நிதி சேவைகள் கிடைப்பதில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்குகளைத் திறந்ததன் மூலம், முறையான வங்கி அமைப்பின் கீழ் 50 கோடிக்கும் மேற்பட்டவர்கள் கொண்டுவரப்பட்டுள்ளது உத்சாகம் அளிக்கிறது.

இந்த வங்கிக் கணக்குகளில் சுமார் 55.5 சதவீதம் பெண்களுக்குச் சொந்தமானவை. 67 சதவீத வங்கிக் கணக்குகள் கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புற பகுதிகளில் திறக்கப்பட்டுள்ளன.

ஜன்தன் கணக்குகளில் உள்ள மொத்த இருப்பு ரூ.2 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது. அந்தக் கணக்குதாரர்களுக்கு ரூ.2 லட்சம் விபத்து காப்பீடு அடங்கிய சுமார் 34 கோடி ரூபே அட்டைகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# 'பிரக்யான்' ரோவரின் வழியில் குறுக்கிட்ட பள்ளம்: பாதையை மாற்றியமைத்த இஸ்ரோ விஞ்ஞானிகள்!

புது தில்லி, ஆக.28: 'சந்திரயான்–3' விண்கலத்தின் வாயிலாக நிலவுக்கு அனுப்பப்பட்ட 'பிரக்யான்' ரோவரின் வழியில் பள்ளம் குறுக்கிட்டதால், அதன் பாதையை இஸ்ரோ விஞ்ஞானிகள் மாற்றியமைத்தனர்.

இஸ்ரோ செலுத்திய சந்திரயான்–3 விண்கலத்தின் 'விக்ரம்' லேண்டர், நிலவின் தென் துருவத்தில் கடந்த 23–ஆம் தேதி வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

அதில் இருந்து வெளியே வந்த 'பிரக்யான்' ரோவர், நிலவின் மேற்பகுதியில் நகர்ந்து தொடர்ந்து ஆய்வுப் பணிகளை மேற்




கொண்டு வருகிறது.

ரோவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணம் மேற்கொண்டபோது, அதன் வழியில் 4 மீட்டர் விட்டம் கொண்ட பள்ளம் குறுக்கிட்டது. ரோவரின் இடத்தில் இருந்து 3 மீட்டர் தொலைவில் இருந்த அந்தப் பள்ளம் முன்கூட்டியே சரியாகக் கண்டறியப்பட்டதால், பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. அதையடுத்து, ரோவரின் பாதையை இஸ்ரோ விஞ்ஞானிகள் பெங்களூரில் உள்ள தரைக்கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து மாற்றியமைத்தனர்.

புதிய பாதையில் ரோவர் தற்போது வெற்றிகரமாகப் பயணம் மேற்கொண்டு வருவதாக எக்ஸ் சமூக வலைதளத்தில் இஸ்ரோ பதிவிட்டுள்ளது.

ரோவரின் பாதையில் குறுக்கிட்ட பள்ளம், மாற்றியமைக்கப்பட்ட புதிய பாதை ஆகியவற்றின் படங்களை சமூக வலைதளத்தில் இஸ்ரோ வெளியிட்டுள்ளது.



நிலவில் 'பிரக்யான்' ரோவர் எதிர்கொண்ட பள்ளம். (வலது) மாற்றுப் பாதையில் சென்ற ரோவரின் வழித்தடம்.